# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 128/2020 <br> Sessions : <br> Deposition of Witness for : LW6/PW-5 <br> Name : , மருத்துவர் முகைதீன் அப்துல்காதர் <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age :52 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 09.02.2024.**

சாட்சியை திருநீலக்குடி காவலர் திருமதி.அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவ மனையில் முதுநிலை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.09.2020 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 10 மணியளவில் சுமார் 65 வயது மதிக்கதக்க சாத்தனூர் கிராமத்தை சேர்ந்த அருள்தாஸ் மனைவி செங்கோல்மேரிஎன்பவரை அவரது உறவினர் சர்மிளா என்பவர்

சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது அன்றை தினம் இரவு 9 மணியளவில் அவரது வீட்டில் தெரிந்த ஒரு நபர் கத்தியால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோததித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது வலது கையில் ஒரு சிதைந்த காயம் இருந்தது. . அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழக்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

காயம்பட்டவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ள காயம் நீள வாக்கில் இருந்ததா அல்லது குறுக்குவாக்கில் இருந்ததா என்றால் அதுபற்றி விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. சிதைந்த காயம் இருந்தது. ஒரு நபர் கையில் அரிவாளோ அல்லது கத்தியோ வைத்துக்கொண்டு தன்னிச்சையாக கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**